கணபதி துணை

# சுந்தரமூர்த்தி சுவாமிகள்

## சரித்திர நாமாவளி.

சுந்தரநாம சுகானந்த போதா
வந்தருள்செந்தா மரைமலர்ப்பாதா

வெள்ளிமலையினில் வீற்றிருப்போனே
வள்ளல்பணியில் மனம்விருப்போனே (சுந்)

மாரிபாகன்றிரு நல்லருள்பெற்றோய்
பாரிற்றிருமுனைப் பாடிநாடுற்றோய் (சுந்)

தெய்வத்திருநாவ லூரினிலாதி
சைவர்மரபிற் சனித்தப்ரக்யாதி (சுந்)

சதுராரூறதி சதிராகக்கற்றோய்
மகராஜனைத்தும் வடிவமுமுற்றோய் (சுந்)

சடங்கவிமகண்மணஞ் சார்ந்திடக்கனந்தோய்
சடங்கினிலரன்வந்து தடுத்திடச்சினந்தோய் (சுந்)

பித்தனென்றீசனைப் பேசிப்பழித்தோய்
பத்திரவாளோலைப் பற்றிக்கிழித்தோய் (சுந்)

கத்தனசலோலை காட்டவேகன்றோய்
சித்தந்தெளிந்தேவல் செய்யப்பின்சென்றோய் (சுந்)

அருட்டுறையானென் றயர்ந்தங்கழுதாய்
கருத்தன்மெய்க் காக்ஷியைக் கண்டுதொழுதாய் (சுந்)

வன்றொண்டநாமம் வனைந்துகொள் பற்றோய்
அன்றேபித்தவென் றருந்தமிழ்ச் சொற்றோய் (சுந்)

இப்படியேதல மெங்கும்பாடென்று
அப்பனுரைத்திட வாசைகொண்மன்று (சுந்)

திருத்துறையூர்த்தெரி சித்தருளாளா
பெருத்ததவநெறி பெற்றதயாளா (சுந்)

சித்தவடமடத்திற் கண்வளர்ந்தாய்
முத்தன்பதத்தை முடித்துக்கிளர்ந்தாய் (சுந்)

தம்மானையறியாத சாதியென்றெடுத்தோய்
இம்மாநிலங்காண வின்றமிழ்தொடுத்தோய் (சுந்)

தில்லைச்சிற்றம்பலந் தெரிசித்தநாதா
எல்லையிலானந்த மெய்தியநீதா (சுந்)

ஆரூர்க்குவாவென் றசரீரி
சீருறச்சிந்தை கிளர்சகவாரி (சுந்)

வாகார்சம்பந்தர் வருதலமென்றே
சீர்காழியைவலஞ் செய்குணக்குன்றே (சுந்)

எம்பிரானுறை யெய்தியதீரா
தம்பிரான்றோழப்பேர் தாங்குங்கெம்பீரா (சுந்)

[illegible] வம்பரையேத்தி
[illegible] (சுந்)

பரவையாரொழினலம் பார்த்துற்றமோகா
பரமனருளென்று பாடும்விவேகா (சுந்)

நாதனருட்சொப்பனங் கண்டதூயா
மாதர்பரவை மணங்கொண்டநேயா (சுந்)

தில்லைவாழந்தண ரெனப்பாசிவனே
திருவாய்மலர்ந்தடி கொடுக்கப்பெற்றவனே (சுந்)

திருத்தொண்டத்தொகையாடிச் சேவித்தவெந்தாய்
திருத்தொண்டர்காப்பண் சிறப்பொடுமறைந்தாய் (சுந்)

குண்டையூர்நெல்வரக் கோளிலிப்புகழ்ந்தோய்
அண்டர்சேராரூ ரமர்ந்துநிகழ்ந்தோய் (சுந்)

தண்கோட்புலியன்பர் தந்திடநயந்தோய்
பெண்களைப்பெற்றிடும் பெண்களாய்வியந்தோய் (சுந்)

திருப்புகலூர்பாடிச் செங்கல்லைப்பொன்றாய்
விருப்பொடுபெற்று விளங்கியவன்றாய் (சுந்)

திருப்பனையூராதி சேவித்துக்கீர்த்தி
விருத்தாசலத்தை விழைந்த மெய்ப்பூர்த்தி (சுந்)

பன்னிரண்டாயிரம் பொன்பெறயோகா
மன்னுமுத்தாநதியின் விட்டத்யாகா (சுந்)

திருத்தில்லையாதிய சேவித்தடுத்தாய்
திருவாரூர்வாவியிற் செம்பொனெடுத்தாய் (சுந்)

இட்டமாக்குருகாவூ ரெய்தியதேவே
கட்டமுதியக் களித்துண்டகோவே (சுந்)

கச்சூரன்றரும் பிச்சானமுண்டாய்
பிச்சாடன்செயல் மெச்சியேகண்டாய் (சுந்)

அன்பாகக்காஞ்சியே காம்பரமாதி
இன்பாயங்கார்தல மேத்தியசோதி (சுந்)

உன்னுந்திருவொற்றி யூரைமதித்தாய்
பன்னும்படம்பக்கர் பாதந்துதித்தாய் (சுந்)

அடிமைசெய்சங்கிலி யாரெழில்கண்டோய்
கடிமணஞ்செய்யுங் கருத்ததுகொண்டோய் (சுந்)

மகிழடியினிற்பர வசஞ்செய்துதந்தோய்
மகிழுஞ்சங்கிலியாரை மணஞ்செய்துகந்தோய் (சுந்)

ஆரூருக்கேகாசை யாலடியெடுத்தோய்
காரூறுங்கண்டார்க்குக் கண்களைக்கொடுத்தோய் (சுந்)

காஞ்சியைப்பாடியோர் கண்பெற்றுக்கொண்டோய்
வாஞ்சித்தாரூரினில் மற்றைக்கண்கண்டோய் (சுந்)

பரமனைத்தூதாக விரவினில்விட்டோய்
பரவையாரின்பப் பரவையுட்பட்டோய் (சுந்)

ஏயர்கோன்கலிக்காம நாயனார்ச்சேர்ந்தோய்
தூயனருளாலே நேயங்கொண்டார்ந்தோய் (சுந்)

சேரமான்பெருமானுஞ் சேரவிருந்தே
ஆரூர்சிவகா னமர்ந்தமருந்தே

தேவிபங்காளனைத் தேர்ந்தருளும்
காவிரியாற்றைக் கடந்திடுபுணை (சங்)

முருகன்பூண்டியர் முன்றமிழ்தொடுத்தாய
திருடர்கொள்பொன்னைச் செரிவாயெடுத்தாய் (சங்)

மதலையணிந்த முதலையினைந்தாய்
முதலைவிழுங்கின மதலையைத்தந்தாய் (சங்)

வந்துவஞ்சைக்களை வெள்ளம்பணித்தோய்
பந்தத்தொடக்கறப் பாடல்புரிந்தோய் (சங்)

அத்தனருளால் வெள்ளானையையூர்ந்தோய்
பத்தர்சூழ்வெள்ளிப்பருப் பதஞ்சேர்ந்தோய் (சங்)

எங்களையாண்டருள் எம்பெருமானே
மங்களமங்களம் வாழிசற்கோனே (சங்)

வேறு.

திருத்தொண்டத் தொகையருள் திருவாயா
திசைமுழுதும்புகழ் திகழ் தூயா

முத்திவழிக்கொரு கண்மணியே
மூலவிருட்கொரு விண்மணியே

சிவனைப்பெண்பால்தூது செலவிடுத்தோனே
செந்தமிழ்வேதத் தொடைதொடுத்தோனே

தம்பிரான்றோழ னெனும்பெருந்தவனே
சைவத்தவக்கோலந் தாங்குமன்னவனே

வன்றொண்டனாமம் வழங்கக்கொண்டோனே
மன்னுஞ்சிவானந்த மதலையுண்டோனே

ஆலாலசுந்தரா வானந்தபோதா
காலாந்தகனிலே கண்டருள்நாதா

வேறு;

சுந்தரமணியே சுபமணியே
மந்திரமணியே மனமணியே.

கோனாறுமணியே குருமணியே
குருபரசுந்தர சிவமணியே.

வேறு.

வன்றொண்டநாதனை வாழ்த்திடுவோம்
வாழ்த்துமவர்க்குமுடி தாழ்த்திடுவோம்.

பரவைதன்மணவா வாசரணம்
பரனுளமகிழ்தோழா சரணம்.

வேறு

ஞானசுந்தரா - மோனமந்திரா.

ஸ்ரீசுந்தரமூர்த்தி சுவாமிகள் திருவடி வாழ்க.